**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1985 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(3) ஆம் உறுப்புரையுடன் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்ட ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு சம்பந்தப்பட்ட தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிதியத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிதியத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும்,

எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது நிதியத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள்ளும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

----------------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரமே சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனம் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியமானது தொடர்ச்சியாக விருசிசு பிரதீப புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல் நடாத்தியிருந்தபோதும், அதற்குப் புறம்பாக தனியார் வங்கி ஒன்று 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி அடைந்த 300 ரணவிரு மாணாக்கருக்கு ரூபா 25,000 வீதம் ரூபா 7,500,000 நன்கொடையாக வழங்கியிருந்தது. அக்கொடுக்கல் வாங்கல் கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | தனியார் வங்கி ஒன்றினால் புலமைப்பரிசில் பெறுவோருக்கு நேரடியாக வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. இவ்வாறான நன்கொடைகள் குறிப்பு ஒன்றின் வாயிலாக நிதிக் கூற்றுக்களில் எதிர்காலத்தில் உட்படுத்தப்படவுள்ளன. | நிதியத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் 04 கணக்கீட்டு விடயங்களுக்கெனச் சுட்டிக் காட்டப்பட்ட பெறுமதிக்கும் அவற்றிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை / கணக்காய்வின் கணிப்பீடு என்பவற்றுக்கிடையேயும் ரூபா 804,518 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | முதலீடுகள், முதலீட்டு வட்டி என்பவற்றின் கணிப்பீடு மற்றும் அவற்றைக் குறிப்பிலிடும் தவறுகள் சீராக்கப்படும். மேலும், நலன்களுக்கான விழாச் செலவினம் மற்றும் விரு சிசு பிரதீப புலமைப்பரிசில் செலவினத்தில் குறிப்பில் இடப்படும்போது தவறுகள் நிகழ்ந்துள்ளன. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பேரேட்டுக் கணக்குகள், பட்டோலை என்பவற்றில் தவறற்ற பெறுமதியைக் காட்ட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐந்தொகையில் ரூபா 55,700,759 க்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பொருட் கணிப்புச் சபை அறிக்கை என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணுவதற்கும் பொருட் கணிப்புச் சபை அறிக்கையைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக் கணக்காய்விற்கு நிலையான சொத்துப் பதிவேடும் பொருட் கணிப்பு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1985 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிதிய அதிகாரச்சட்டம் | | | |
| (i) | 9 ஆம் பிரிவு | தமது கடமையின்போது காயமடையும் அல்லது மரணமடையும் பொலிஸ் அதிரடிப்படை அங்கத்தவர் ஒருவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் வழங்குவதும் தேசிய பாதுகாப்பு மேம்பாடு மற்றும் சான்றுறுதிப்படுத்துல் என்பவற்றின் பொருட்டும் நிதியத்தின் பணம் பயன்படுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், அதன் பொருட்டு மீளாய்வாண்டின்போது நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்படவில்லை. | அதிகாரச்சட்டத்தில் உள்ள நோக்கங்கள் தொடர்பாக தற்போதைய ஆளுநர் சபையின் கருத்துக்கமைய எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், 2019 ஆம் ஆண்டின்போது பொலிஸ் உத்தியோகத்தர்களின் 25 பிள்ளைகளுக்கு நலன்கள் வழங்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் 100 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வீட்டு நலன்களும் 25 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களும் வழங்குவதற்கும் நிதியத்தின் ஆளுநர் சபை அங்கீகாரமளித்துள்ளது. | அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 13 ஆம் பிரிவு | நிதியத்தின் 2016 முதல் 2019 வரையான நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. | அதிகாரச்சட்டத்தின் 2018 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க 2018.06.22 ஆந் திகதிய திருத்தங்களின்படி 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளன. | அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 133 | நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 385(ஆ) | இலங்கை மத்திய வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கின் பொருட்டு வங்கிக் கணக்கிணக்கம் மேற்கொள்ளப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான வங்கிக் கணக்கிணக்கத்தை தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 756 | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணத்தின்படி நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான பொருட் கணிப்புச் சபை அறிக்கை 2020 ஆகஸ்ட் 31 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019 தொடக்கம் தொடர்ந்து பொருட் கணிப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கியில் பேணப்படும் நடைமுறைக் கணக்கில் ரூபா 5 மில்லியன் 03 மாதங்களாக ஆக்கபூர்வ முதலீட்டில் ஈடுபடுத்தப்படாதிருந்தது. | தவிர்க்க முடியாத காரணங்களால் ஏதாவது நலன்களை வழங்குவதில் தாமதம் ஏற்படின், அதற்குரிய தொகையை இக்கணக்கிலிட வேண்டியுள்ளது. அத்தொகையை தற்காலிகமாக முதலீடு செய்வது நடைமுறைச் சாத்தியம் அற்றதாகும். | மேலதிக தொகையை தாமதமின்றி முதலீடு செய்ய வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 74,497,183 பற்றாக்குறை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 87,869,225 ஆகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 13,372,042 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 28,529,826 குறைவடைந்திருந்ததுடன், மெத் செவன வீடமைப்பு நலன் கொடுப்பனவுச் செலவினம் ரூபா 39,740,279 குறைவடைந்ததும் விரு சிசு பிரதீப புலமைப்பரிசில் செலவினம் ரூபா 3,565,920 குறைவடைந்தும் இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரணவிரு வீடமைப்பு நலன்களை வழங்கும்போது விழாக்களுக்கென ரூபா 1,792,295 மற்றும் அதனை அச்சிடும் ஊடகங்களில் பிரசுரிப்பதற்கு ரூபா 626,750 என ரூபா 2,419,045 கூட்டுத்தொகை நிதியத்தலிருந்து மீளாய்வாண்டின்போது செலவிடப்பட்டிருந்தது. | தேசிய பாதுகாப்பு நிதியத்தின் மூலம் மீளாய்வாண்டின்போது ஏறக்குறைய ரூபா 160 மில்லியனுக்கான நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் மூலம் போர் வீரர்களது மன தைரியத்தை மேம்படுத்தவும் நிதியத்திற்கு நிதிப் பங்களிப்பை வழங்குவதற்கும் பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கத்தை ஈடேற்றுவதற்கு நிதியத்தின் பணம் செலுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் தேவையான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதியத்தின் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் வரவு, செலவுத் திட்டத்தை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | வரவு, செலவுத் திட்டத்தை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.3 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இல்க நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி அதிகாரச்சட்டம் மற்றும் சனாதிபதியின் செயலாளரது 2018 மார்ச் 16 ஆந் திகதிய பீஎஸ்/எஸ்பீ/எஸ்பீ/3/201 ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம் நிதியத்திற்குரிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை அளவிடுவதற்கான சுட்டு என்பன இனங்காணப்படவில்லை. | நிதியத்தின் நோக்கத்தை ஈடேற்றக்கூடிய நிலைத்து நிற்கவல்ல நோக்கத்தை அடைவதற்கு எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. | அதிகாரச் சட்டம் மற்றும் சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |